www.padippakam.com



### இந்திய ராணுவம் வர தேவை இல்லை

# எங்களை அங்கீகரித்தால் போதும் விடுதலை நாங்களே பெற்று கொள்கிறோம்

## தமிழ் ஈழ போராட்ட தளபதி முகுந்தன் பேட்டி

பெங்களூர் மே, 16—

இந்தியா எங்களை அங்கீகரித்தால் போதும்ராணுவம் தேவை இல்லை முடிந்தால்ஆயுதம் தரட்டும் எங்கள் விடுதலையை நாங்களே பார்த்துக் கொள்வோம் என்று தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழக தளபதி முகுந்தன் கூறுகிறார் அவர் இன்று பெங்களூர் தமிழ்சங்கத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்

பேட்டியில் தமிழ்ஈழ போராட்டம் பற்றி அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

நாங்கள் திடீர் என்று ஒரே நாளில் முடிவுஎடுத்து ஆயுதம் ஏந்தவில்லை பல முறை எங்கள் தலைவர்கள் சிங்கள ஆட்சியாளருடன்



பேசி தோல்வி கண்டனர் சின்னச் சின்ன சலுகைகளை அறிவித்து ஆட்சியாளர்கள் எங்களை ஏமாற்றி வந்தனர் முதலில் எங்கள் மொழியில் கைவைத்தனர் படிப்படியாகசட்ட சமாதானத்துடன் நாங்கள் புறக்கணிக்கப்பட்டோம் இரண்டாந்தர குடிமக்கள் ஆனோம் மனித உரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட்டது துப்பாக்கிச்சூடுகள் தொடர்ந்ததுதமிழர் பலர் சொந்ததாய் நிலத்தில் தமிழ் ஈழத்தில் உயிர் இழந்தனர்

வேறு வழி இல்லாமல் நாங்கள் துப்பாக்கி ஏந்தினோம் போராட்டத்தை நாங்கள் தேடிப் போகவில்லை காலத்தின் கட்டாயத்தில் தள்ளப்பட்டோம் சிங்கள இனவெறி ஆட்சியாளருக்கும் தமிழருக்கும் இடையே நடைபெறும் போர் வேறு வார்த்தையில் சொல்வதென்றால் ஆதிக்க வாதிகளுக்கும் பாதிக்கப் பட்டவர்களுக்கும் இடையே நடைபெறுகிற போராட்டம் ஆகும் முதல் கட்டபோராட்டம் ஆரம்பம் ஆகிவிட்டது

எங்கள் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் தான் நாங்கள் கொரில்லா தாக்குதலை அவ்வப்போது நடத்துகிறோம் ஆனால் இந்த கொரில்லா தாக்குதலில் மட்டுமே விடுதலை வந்துவிடாது

நாங்கள் ஒரு மாபெரும் முழுயுத்தம் மக்கள்யுத்தம் நடத்த திட்டமிடுகிறோம் முதலில் எங்கள் மக்களை அரசியல் மயப்படுத்துகிறோம் கிராமங்கள் தோறும் குழுக்கள் அமைக்கிறோம் இதில் 4 பிரிவுகள் உண்டு விவசாயிகள் பிரிவு பெண்கள் பிரிவு மாணவர் பிரிவு நிலமற்றோர் பிரிவு என நாலுவகை குழுக்களை அமைத்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கிறோம்இந்த வகையில் தமிழ் ஈழம் விடுதலைபெற மக்கள் இயக்கம் ஒன்றைதயார் செய்கிறோம் மக்கள்மூலம் மக்களிடம் அதிகாரம் வரவேண்டும் அதற்கான போர் முறை தான்நாங்கள் வகுத்திருப்பது

நாங்கள் ஆயுதம் ஏந்தி இருப்பது தற்காப்புக்குத் தான் மக்களை பாதுகாக்கத்தான் அடுத்தவர்களை அப்பாவிகளை அழிப்பதற்காக இல்லை தனி நபர் கொலையில் சிறு குழு தாக்குதலில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை அப்பாவி சிங்களவன் எவனும் எங்களுக்கு எதிரி இல்லை

### படை பலம்

சிங்களப்படையில் 28ஆயிரம் பேர் இருக்கிறார்கள் எங்கள் இயக்கத்தில் 6ஆயிரம் பேர் மற்றும் உள்ள

2-ம் பக்கம் பார்க்க

NEWS தினச்சுடர்

PEOPLES LIBERATION ORGANIZATION

THAMILEELAM

DEMOLISH ALL REPRESSION

P.L.O.T

படிப்பகம்

www.padippakam.com





தமிழ் ஈழ விடுதலை போராட்ட தளபதி முகுந்தன் என்ற உமாமகேஸ்வரன் இன்று பெங்களூரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த போது எடுத்த படம் இடம் இருந்து 4வதாக இருப்பவர் முகுந்தன் மற்றவர்கள் நாகலிங்கம் சேலிகந்தப்பா வாசுதேவன் செந்தில் ஆகியோர் படம்-பாபுராஜ்

# இந்திய ராணுவம் தேவை இல்லை....

— 1ம்-பக்க தொடர்ச்சி —

விடுதலை இயக்கங்களில் 4 ஆயிரம்பேர் ஆகமொத்தம்10ஆயிரம்பேர் பயிற்சி பெற்ற படைவீரர்கள்உள்ளனர்:

இவர்களில் பெரும்பாலோர் இலங்கை காடுகளில் பயிற்சி பெற்றவர்க்ள் மீதிப் பேர் வெளி நாடுகளில் பயின்றவர்கள் எந்த சூழ்நிலையிலும் தாங்கள் ஏந்தியுள்ள ஆயுதத்தை தவருக பயன் படுத்த மாட்டார்கள் அரசியல் தெளிவும் சிந்தனை ஆற்றலும் செயல் ஆற்றலும் இவர்களுக்கு பயிற்சியாக அளிக்கப்படுகிறது இது தான் எங்கள் பலம்எங்கள் போராளிகள் ஒவ்வொருவனும் எதற்காக போராடுகிறேம் என்பதை உணர்ந்தவன் சிங்கள ராணுவ பலத்தோடு ஒப்பிடுகிற போது எங்கள் படை சிறியது தான் அவர்கள் வைத்திருக்கும் படைக்கலன்களோடு ஒப்பிட்டால் எங்களிடம் ஆயுதமும் குறைவாகத்தான் இருக்கிறது என்ருலும் அது கூலிப் படை இது கொள்கைப் படை எனவே எங்களால் தமிழ்ஈழத்தை வென்றெடுக்கமு டியும்

## விடுதலை இயக்கங்கள்

விடுதலைக்கு போராடுவோர் 6 பிரிவாக இயங்கி வந்தனர் இப்போது ஒன்றுபடும் நேரம் 4 இயக்கங்கள் ஒன்ருகி விட்டன எங்கள் தமிழ் ஈழ மக்கள் விடுதலை கழகமும் தமிழ் ஈழ ராணுவமும் ஒன்ருக இருக்கின்றன நாங்களும் ஒன்ருக இணைய பேச்சுநடத்தி வருகிறேம் விரைவில்ஒன்றுசேருவோம் அப்போது தான் நமது நோக்கத்தை எளிதில் நிறைவேற்றமுடியும் நாங்கள் ஒன்றுபடுவதை ஆட்சியாளர் தடுக்க பார்க்கிருர்கள்

எங்கள் இயக்கத்தைப் பொறுத்தவரையில் தமிழ் ஈழவிடுதலைக்கு ஆதரவாக எந்த சக்தி உருவானுலும் அவற்றை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தான் அமிர்தலிங்கம் தொண்டமான் யாரானுலும் எங்கள் நோக்கத்தை ஏற்றுக் கொண்டால் சரி அவர்களை நாங்கள் ஏற்றுக் கொள்வோம்

## எங்கள்எல்லை

எங்கள் யுத்தம் எங்கள் பகுதியில் இருக்கக்கூடாது என்பதில் நாங்கள் மிகவும் கண்டிப்பாக இருக்கிறேம் யாழ்ப்பாணத்திற்குள் தாக்குதல் நடத்துவது கூடாது ஒரு சிறிய வெற்றிக்காக நமக்கு பெரிய இழப்புகளை ஏற்படுத்திக் கொள்வது சரிஇல்லை என்பதுதான்எங்கள்வாதம் இதில் தான் விடுதலைப் புலிஇயக்கத்துடன் நாங்கள் வேறுபடுகிறேம்

News

பொதுவாக கொரில்லா போர் முறை எல்லா நாடுகளிலும் வெற்றி பெற்று விடாது இலங்கையை பொறுத்தவரை இரண்டு தேசிய இனங்கள் உள்ளன பூகோள அமைப்பு முறையை வைத்து கணித்தால் இங்கு கொரில்லா போர் வெற்றி பெற வழி இல்லை ஆகவே தான் மக்கள் போர் முழுப்போர்நடத்த வேண்டும் என்கிறேம்

## அனுராதபுரம் தாக்குதல்

விடுதலை போராளிகள் நியாயத்தில் நிற்பவர்கள் அப்பாவிகளை அவர்கள தொடுவதில்லை என்ற நல்ல பெயர் உலகம் முழுவதும் பரவி உள்ளது அந்த பெயருக்கு களங்கம் உண்டாக்கும் வகையில் அனுராதபுரத்தில் சம்பவம் நடந்துள்ளது அப்பாவி சிங்களவர் அங்கே கொல்லப்பட்டிருக்கிருர்கள் அதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறேம் இது போன்ற தாக்குதல்கள் நமக்கு பின்னடைவு தான் ஏற்படுத்தும்

உலக நாடுகள் மத்தியில் தமிழ்ஈழவிடுதலை போராட்டம் பற்றிய உண்மைகள் ஓரளவு பரவி வருகிறது தமிழ்ஈழ வானெலி மூலமாகவும் துண்டு பிரசுரங்கள் கொள்கை விளக்க தஸ்தாவேஜுகள் வாயிலாகவும் எங்கள் போராட்டம்பற்றி உலகுக்கு அறிவித்து வருகிறேம்

இந்திய பத்திரிகைகள் இன்னும் தாராளமாக எங்கள் நியாயங்களை எடுத்துச்சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேம் இவ்வாறு முகுந்தன் பேட்டியில் குறிப்பிட்டார்

தமிழ்நாடு எந்த வகையில் உங்களுக்கு உதவுகிறது என்ற கேள்விக்கு அவர்கள் அகதிகளை வைத்துபாதுகாக்கிருர்கள் வேறு புலிப்படைக்கு பலற்சி அளிக்கிருர்கள்என் பதெல்லாம் தவருன தகவல் இந்தியாவில் எங்குமே புலிப்படைக்கு பயிற்சி அளிக்கப்படவில்லை இந்தியா தமிழ் ஈழத்தை அங்கீகரித்தால் போதும் எங்கள் விடுதலையை நாங்களே பார்த்துக் கொள்வோம் என்று முகுந்தன் குறிப்பிட்டார்

முதலில் கர்நாடக தமிழர் முன்னணியை சேர்ந்த குஞ ஈழப் போராளிகளை அறிமுகம் செய்து வைத்தார் நாகலிங்கம் சேலிகந்தப்பா வாசுதேவன் செந்தில் ஆகிய விடுதலை போராளிகளும் நிருபர் கேள்விகளுக்கு பதில் அளித்தனர்

படிப்பகம்